# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

## அலகு தேர்வு 7

### மேல்நிலை இரண்டாம் ஆண்டு ----- கணக்குப்பதிவியல்

### பாடம் 7. நிறுமக் கணக்குகள்

**காலம் : 75 நிமிடம்** **மதிப்பெண்கள் : 50**

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
   அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
   இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை

2. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
   இ) பங்கு முதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

3. முன்னுரிமைப்பங்கு என்பது -----------
   (i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   (ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   அ) (i) மட்டும் சரியானது ஆ) (ii) மட்டும் சரியானது
   இ) (i) மற்றும் (ii) சரியானது ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

4. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்
   (i) குறைஒப்பம் - 1. முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்
   (ii) மிகைஒப்பம் - 2. வெளியிட்ட பங்குகளைவிட அதிகமாக ஒப்பப்பட்டது
   (iii) அழைப்பு நிலுவை - 3. வெளியிட்ட பங்குகளைவிட குறைவாக ஒப்பப்பட்டது
   (iv) அழைப்பு முன்பணம் - 4. செலுத்தப்பெறாத அழைப்பு பணம்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 4 | 3 | 2 | 1 |
| இ | 3 | 2 | 4 | 1 |
| ஈ | 3 | 4 | 1 | 2 |

5. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?
   அ) வெளியிடப்பட்ட பங்கு முதல் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலைவிட, ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.
   ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில், வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்.
   இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.
   ஈ) செலுத்தப்பட்ட பங்கு முதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.



6. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ₹. 2,400, ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ₹. 300 எனில், முதலினக் காப்பு ₹. ---------- ஆகும்.
   அ) ₹. 1,000 ஆ) ₹. 2,000 இ) ₹. 2,100 ஈ) ₹. 300

7. ₹. 9 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை ------------
   அ) பங்கொன்று ₹. 10 ஆ) பங்கொன்று ₹. 9 இ) பங்கொன்று ₹. 8 (ஈ) பங்கொன்று ₹. 1

8. நேர்மைப்பங்குகளை -------------------- என்றும் கூறலாம்.
   அ) சாதாரண பங்குகள் ஆ) பொது நிலைப் பங்குகள்
   இ) அங்கிகரிக்கப்பட்ட முதல் ஈ) அ மற்றும் ஆ

9. கூற்று ( A ) : ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம். அப்பங்குகள் எந்த விலையிலும் மறுவெளியீடு செய்யலாம்.
   காரணம் (R) : ஆனால், வெளியீட்டு விலை, ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும்.
   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி

10. இந்திய நிறுமச் சட்டம், 2013 அட்டவணை F- ன் படி நிறுமச் செயல்முறை விதிகளில் கூறி உள்ளவாறு அழைப்பு முன்பணத்திற்கு வட்டியாக ஆண்டுக்கு ---------- மிகாமல் செலுத்தப்பட வேண்டும்.
    அ) 5 % ஆ) 6% இ) 12% ஈ) 25%

### பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
13. அழைப்பு முன்பணம் என்பதன் பொருள் என்ன?
14. பொது வெளியீடு என்றால் என்ன?
15. சசி நிறுமம் ₹.10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை வெளியீடு செய்தது. விண்ணப்பத்தின் போது ₹. 5 ; ஒதுக்கீட்டின்போது ₹. 2 ; முதல் அழைப்பு மற்றும் இறுதி அழைப்பின்போது ₹. 3 செலுத்தவேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

B. BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

16. கோகுல் நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் 5,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்கொன்று ₹. 2 முனைமத்தில் வெளியிட்டால் குறிப்பேட்டுப் பதிவுகள் எவ்வாறு அமையும்?

17. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ₹. 10 மதிப்புடைய 200 சாதாரண பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகையான ₹. 2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். பின்னர் இப்பங்குகள் ₹. 1,500 - க்கு மறு வெளியீடு செய்யப்பட்டது எனில், முதலின காப்பிற்கு மாற்றப்படும் தொகை எவ்வளவு?

## பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 3 = 15$

18. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.

19. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?

20. அழைப்பு நிலுவை என்றால் என்ன?

21. பிரியா வரையறு நிறுமம் முற்றும் அழைக்கப்பெற்ற ₹. 10 மதிப்புடைய 3000 பங்குகளை, இறுதி அழைப்புத் தொகை ₹. 3 ம் செலுத்தத் தறியததால் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. இதில் 1500 பங்குகளை, பங்கொன்றுக்கு ₹. 8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

22. கோவிந்தன் நிறுமம் ₹. 4,80,000 மதிப்புள்ள இயந்திரத்தை கஜேந்திரன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹. 10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப்பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்க்கண்ட நிலையில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.
   i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்
   ii) பங்குகளை 20 % முனைமத்தில் வெளியிட்டால்

23. விஷ்ணு நிறுமம் 60,000 பங்குகளை, பங்கு ஒன்று ₹. 10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 3, ஒதுக்கீட்டின் போது ₹. 4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3 செலுத்தப்பட வேண்டும். பொதுமக்களால் 48,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

24. அஞ்சலி மாவு அரைக்கும் வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹. 10 வீதம் ₹. 4,00,000 அங்கீகரிக்கப்பட்ட முதல் திரட்டுவதற்கென வெளியிட்டது. அதில், 30,000 பங்குகளை விண்ணப்பத்துடன் ₹. 2, ஒதுக்கீட்டில் ₹. 5 மற்றம் முதலாவது அழைப்பில் ₹. 3 பெறப்பட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன. அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. ஆனால், ஒதுக்கீட்டில், 500 பங்குள்ள ஒரு பங்குதாரர் முழுவதுமான தனது தொகையினை செலுத்திவிட்டார். குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.



## பகுதி --- IV

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும். $3 \times 5 = 15$

25. சுஜா வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹. 100 வீதம் 20,000 சாதாரண பங்குகளை ₹. 10 முனைமத்துடன் வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின்போது | ₹. 30. |
| ஒதுக்கீட்டின் போது | ₹. 40 ( முனைமத்துடன் ) |
| முதலாவது அழைப்பின் போது | ₹. 20 |
| இறுதி அழைப்பின் போது | ₹. 20 |

25,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. பங்குகள் மீது பெற வேண்டிய அனைத்து தொகையும் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

26. அனு நிறுமத்தால் ₹. 10 முகமதிப்பில் வெளியிடப்பட்ட நேர்மைப்பங்குகளில், தியாகு என்பவர் வைத்திருந்த 200 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ₹. 3 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ₹. 6 வீதம் லக்ஷ்மனுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன். ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

27. கோகிலா நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. தொகையானது விண்ணப்பத்தின் போது ₹. 3, ஒதுக்கீட்டின் போது ₹. 3 ( முனைமம் உட்பட ), முதல் அழைப்பின் போது ₹. 3 மற்றும் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3 எனச் செலுத்தப்படவேண்டும்.
பின்வரும் தருணங்களில் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்வதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
   i) 100 பங்குகளை வைத்திருக்கும் கணேஷ் என்பவர் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.
   ii) 100 பங்குகளை வைத்திருக்கும் கணேஷ் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகை, முதல் அழைப்பு, இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.
   iii) 100 பங்குகளை வைத்திருக்கும் கணேஷ் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் முதல் அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் முதல் அழைப்பிற்கு பின் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்டன.

28. காமினி வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ₹. 10 மதிப்புள்ள ₹. 7 அழைக்கப்பட்ட 20 சாதாரண பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. மகேஷ் என்பவர் அப்பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு பணம் ₹. 5 செலுத்தி இருந்தார். அவற்றில் 15 பங்குகள் பங்கொன்றுக்கு ₹. 6 வீதம் பெற்றுக் கொண்டு ₹. 7 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக சுரேஷ் என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com